# இலங்கையில் மாற்றுக்கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

*செப்ரெம்பர் 2014*



1989 செப்ரெம்பர் 21 அன்று எல்.ரி.ரி.ஈ.இனால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு முன்னணிப்பாத்திரம் வகித்த பெண்கள் மனித உரிமைகள் காப்பாளரும், கல்வியியலாளருமான கலாநிதி ரஜனி திராணகமவின் நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் குழப்பப்பட்டதுடன், அமைதிப் பேரணியொன்றும் தடைசெய்யப்பட்டது.


**INFORM** Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

# உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

இ. வடக்கிலும், கிழக்கிலும் நினைவு தினங்களுக்கும், பிரார்த்தனை சேவைகளுக்கும் தடையும், அச்சுறுத்தல்களும்

ஈ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மீறப்படுகின்றது

உ. மாணவ செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அடக்குமுறை

ஊ. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளை அடக்குதல்

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்

மாற்றுக் கருத்க்களுக்களுக்கு எதிரான அடக்குமுறையின் சம்பவங்களை அனேகமாக நாளாந்தம் கண்ட ஒரு மாதமாக செப்ரெம்பர் மாதமும் விளங்கியது. நன்கு அறியப்பட்ட பெண் மனித உரிமைகள் காப்பாளரும், கல்வியியலாளருமான கலாநிதி ரஜனி திராணகமவுக்காகத் திட்டமிடப்பட்ட நினைவுதினமொன்று முன்னரே பதிவுசெய்யப்பட்டிருந்த இடங்களை மீளப்பெறுவதன் மூலம் தடைசெய்யப்பட்டதுடன், எதிர்ப்புப் பேரணியொன்றும் பொலிசாரினால் தடைசெய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கான ஒரு பிரார்த்தனைச் சேவை இரு வாரங்களினுள் இரு தருணங்களில் தடைசெய்யப்பட்டதுடன், மட்டக்களப்பில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுதினங்களைத் தடைசெய்வதற்கு நீதிமன்ற உத்தரவுகளைப் பொலிசார் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பில், இரு மனித உரிமைகள் வழக்கறிஞர்கள் மீது மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன், எதிர்க்கட்சி தொழிற்சங்கவாதிகளும் தாக்கப்பட்டனர். ஜூனில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கலகம் இடம்பெற்ற அளுத்கம பகுதியில் சூழ்நிலையை அறிக்கையிடுவதற்கு முற்பட்ட இதழியலாளர்களை இராணுவம் தடுத்து நிறுத்தியது. ஊவா மாகாணத்தில் தேர்தலுக்குப் பிந்திய சூழ்நிலைகளையிட்டு செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்கள் தாக்கப்பட்டதுடன், இதில் பாரதூரமான காயங்களின் காரணமாக பல வாரங்களாக ஒருவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்றார். வட பகுதி இதழியலாளர் ஒருவர் மரணத்திலிருந்து தெய்வாதீனமாக தப்பிக்கொண்டதுடன், யாழ்ப்பாணத்தில் தமிழ் ஊடகச் செயற்பாட்டாளர் ஒருவர் தொடர்ச்சியான விசாரணைக்கும், அச்சுறுத்தலுக்கும் அத்துடன் தொந்தரவுகளுக்கும் உட்பட்டார். தனது யுத்த கால அனுபவங்கள் பற்றி கவிதைப் புத்தகமொன்றை எழுதிய பின்னர் தமிழ் கத்தோலிக்க மதகுரு ஒருவர் விசாரிக்கப்பட்டதுடன், கவிதைப் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டமைக்காக ஒரு தொகையிலான பாடசாலை அதிபர்கள் விசாரிக்கப்பட்டார்கள். அரசாங்கத்தை விமர்சித்த தனது அரசியல் நோக்கங்களின் காரணமாக, தனது உயிருக்கு ஏற்பட்ட பயமுறுத்தல்களின் விளைவாக வெளிநாட்டில் தற்போது வாழ்கின்ற சிங்கள எழுத்தாளர் ஒருவருக்கு வழங்கப்படவிருந்த இலக்கிய விருதொன்றை மீளப்பெறுவதற்கு தீவிரவாதப்போக்குடைய குழுக்களினாலான அழுத்தம் இட்டுச்சென்றது. விருது பெறுவதற்கு அவரைத் தெரிவுசெய்த நான்கு நடுவர்கள் (ஐந்து பேரில்) அரசாங்கத்திற்கு ஆதரவிலான தீவிரவாதப்போக்குடைய எழுத்தாளர் ஒருவரினால் நிந்திக்கப்பட்டனர்.

நீர்கொழும்பில் இணையதள இதழியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வொன்று குழப்பப்பட்டது. திருகோணமலையில் சிவில் சமூகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டமொன்று இரு தடவைகள் கூட்டம் நடைபெறவிருந்த இடங்களை மீளப்பெறுவதன் மூலம் தடைசெய்யப்பட்டதுடன், அது கண்காணிப்புக்கும் உட்பட்டது. சர்வதேச மகாநாடொன்றில் பங்கெடுப்பதற்காக அழைக்கப்பட்ட இரு முன்னணிவாய்ந்த இலங்கையின் மனித உரிமைக் காப்பாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் அழுத்தத்தின் காரணமாக அவர்களது அழைப்பு இரத்துசெய்யப்பட்டதை அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமொன்று ஏற்றுக்கொண்டது. சிலையொன்றின் காரணமாக கத்தோலிக்கர்களினால் மேற்கொள்ளப்பட்ட அமைதியான பேரணியொன்றை அடக்குவதற்காக பொலிசார் நீரைப் பீச்சியடித்ததுடன், கண்ணீர் புகைக் குண்டுகளையும் ஏவினார்கள். முன்னணிவாய்ந்த காணாமல் போனோர் எதிர்ப்பு பிரச்சாரகர் ஒருவரை (அவரது மகன் காணாமல் போயுள்ளார்) விடுவிக்குமாறு கோரி போராட்டமொன்று இடம்பெற்ற போது, அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு 200 நாட்களின் பின்னரும் கூட குற்றச்சாட்டுக்கள் கொண்டு வரப்படாத போதிலும், அவரைப் பயங்கரவாத ஆதரவாளர் ஒருவராக இதற்கு பதில் போராட்டம் நடத்திய குழுவொன்று சித்தரித்தது. பதில் போராட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையொன்று 8 மனித உரிமைகள் காப்பாளர்களின் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தி, அவர்களைத் தேசத்துரோகிகளாகச் சித்தரித்திருந்தது.

மாணவ செயற்பாட்டாளர்களும் அடக்குமுறைக்கு முகங்கொடுத்தனர். எதிர்ப்புத் தெரிவித்த மாணவர்கள் மொனராகலை பிரதேச சபைத் தலைவரினால் அச்சுறுத்தப்பட்டதுடன், எதிர்ப்புப் பதாகைகளும் அழிக்கப்பட்டன. வளாகத்தில் தேடுதல் நடத்துவதற்காக பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தைப் பொலிசார் சுற்றிவளைத்ததுடன், 4 மாணவத் தலைவர்களை ஒப்படைக்குமாறும் கோரினார்கள். ஊவா மாகாணத்தில் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சிகள் ஒரு தொடரிலான தாக்குதல்களுக்கும், அச்சுறுத்தலுக்கும் உட்பட்டதுடன், அரசாங்க அலுவலர்களாகப் பணிபுரியும் எதிர்க்கட்சித் செயற்பாட்டாளர்களின் பட்டியல்களுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இது அவர்களது அரசியல் தொடர்புகளையிட்டு அவர்களைத் தொந்தரவுசெய்வதற்கு ஓர் ஆரம்ப நடவடிக்கையாக நோக்கப்பட்டது. அரசியல் கொந்தளிப்பை விளைவிப்பதாகவும், பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவிப்பதாகவும் முன்னணிவாய்ந்த தமிழ் அரசியல் கட்சியொன்றைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குற்றஞ்சாட்டினார். கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த பிரதி பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் சந்தித்த குடும்பமொன்றும் விசாரிக்கப்பட்டது.

மாற்றுக்கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை காரணமாகத் தொடருகின்ற சம்பவங்களைக் கவனத்தில் எடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களினால் வெளிப்படையான முயற்சிகள் இருக்கவில்லை. முன்னரைப் போன்று, செப்ரெம்பரில் அறிக்கையிடப்பட்ட பெருமளவு சம்பவங்களுக்கு அரசாங்க அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், பொலிசார், இராணுவத்தினர், அரசாங்க ஊடகவியலாளர்கள் மற்றும் அரசாங்கம் மீது அனுதாபங் கொண்ட இதழியலாளர்கள் ஆகியோர் காரணமாக இருந்தனர் எனத் தோன்றுகின்றது. அத்துடன் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் கூட, பொலிஸ் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இணக்கமற்றிருந்தன.

# இலங்கையில் மாற்றுக்கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

## செப்ரெம்பர் 2014: சம்பவங்களின் பட்டியல்

| | சம்பவத் திகதி | சம்பவ இடம் (மாவட்டம்) | சம்பவத்தின் விவரணம் | மூலம் |
|---|---|---|---|---|
| **அ.** **அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்** | | | | |
| 1. | 2 செப். 2014 | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு மாவட்டம்) | பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரைச் சந்தித்தமைக்காக முல்லைத்தீவு தமிழ்க் குடும்பத்திற்கு அச்சுறுத்தல் | http://tamilguardian.com/print.asp?articleid=12073 |
| 2. | 3 செப். 2014 | யாழ்ப்பாணம் மாவட்டம் | தமிழ் கத்தோலிக்க மதகுருவின் கவிதை குறித்து யாழ்ப்பாணத்தில் அவரை TID விசாரித்தது | http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/475-sri-lankas-anti-terror-squad-grills-priest-school-teachers-over-tamil-poetry-book |
| 3. | 4 செப். 2014 | கிளிநொச்சி மாவட்டம் | "உயிர்ப்பதிவு" கவிதைப் புத்தகத்தின் விநியோகம் குறித்து பாடசலை அதிபர்கள் துருவித்துருவி விசாரணை | http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/475-sri-lankas-anti-terror-squad-grills-priest-school-teachers-over-tamil-poetry-book |
| 4. | 13 செப். 2014 | கொழும்பு (கொழும்பு மாவட்டம்) | இரு மனித உரிமைகள் வழக்கறிஞர்கள்/மனித உரிமைகள் காப்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் | http://www.ft.lk/2014/09/16/lawyers-collective-condemns-death-threats-to-attorneys/ |
| 5. | | கொழும்பு (கொழும்பு மாவட்டம்) | தொழிற்சங்க உறுப்பினர்களும், தலைவர்களும் தாக்கப்பட்டனர் | https://www.facebook.com/lankaenews/posts/787788224619678 (சிங்களத்தில்) |
| 6. | 30 செப். 2014 | கிழக்கு மாகாணம் | பிரதி பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் பின்தொடரப்பட்டதுடன், கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டார் | http://blogs.fco.gov.uk/lauradavies/2014/09/30/looking-over-my-shoulder/ |
| 7. | 29 செப். 2014 | கொழும்பு (கொழும்பு மாவட்டம்) | தடுத்துவைக்கப்பட்ட காணாமல் போனோர் எதிர்ப்பு பிரச்சாரகர் பயங்கரவாத ஆதரவாளர் ஒருவராகச் சித்தரிப்பு | http://www.lankasrinews.com/view.php?220RT403dRX4e2GmEcb284Edd378qbc3tGge42TgJ023dBm3 |
| 8. | 29 செப். 2014 | கொழும்பு (கொழும்பு மாவட்டம்) | நம்பிக்கைத் துரோகச் செயற்பாடுகளுக்கு மனித உரிமைகள் காவலர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர் | http://srilankabrief.org/2014/09/pro-govt-mob-mocks-leading-civil-society-activists-in-sri-lanka/ |
| **ஆ.** **பேச்சுச் சுதந்திரம் மீறப்படல்** | | | | |
| 9. | | | சிறந்த நாவலுக்கான இலக்கிய விருது தீவிரவாதபோக்குடையவர்களின் எதிர்ப்பின் பின் நிறுத்தப்பட்டது | http://srilankabrief.org/2014/09/religious-extremists-threatened-not-to-select-mage-adaraneeya-yakshni-my-beloved-demoness-for-best-novel-award-2014/ |
| 10. | 14 செப். 2014/ 25 செப். 2014 | | பொன்மய நூலுக்கான இலக்கிய விருதின் நடுவர் குழாம் "டொலர் காகங்கள்" மற்றும் "சமாதானக் காகங்கள்" என நாமம் சூட்டப்பட்டது | http://srilankabrief.org/2014/09/religious-extremists-threatened-not-to-select-mage-adaraneeya-yakshni-my-beloved-demoness-for-best-novel- award-2014/ |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | | அளுத்கம (களுத்துறை மாவட்டம்) | கலகத்திற்கு பிந்திய அளுத்கமவில் செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர் ஒருவரை இராணுவம் தடைசெய்தது | https://www.youtube.com/watch?v=rqOOIljivig#t=163 |
| 12. | 20செப். 2014 | பரந்தனுக்கும், கரடிப்போக்குக் கும் இடையில் (கிளிநொச்சி மாவட்டம்) | வடக்கில் கொலை முயற்சியொன்றிலிருந்து தமிழ் இதழியலாளர் தப்பினார் | http://tamilnet.com/art.html?catid=13&artid=37389 |
| 13. | செப். 2014 | யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் மாவட்டம்) | யாழ்ப்பாணம் பத்திரிகைச் சுதந்திரச் செயற்பாட்டாளர் விசாரிக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார் | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37400 |
| 14. | 22செப். 2014 | ஹாலி எல (பதுளை மாவட்டம்) | ஊவா மாகாண சபை தேர்தல்களின் பின்னர் இதழியலாளர்கள் தாக்கப்பட்டனர் | http://srilankabrief.org/2014/09/sri-lanka-journalists-assaulted-in-north-and-south/#more-20280 |
| இ. வடக்கிலும், கிழக்கிலும் நினைவு த்தினங்களுக்கும், பிரார்த்தனை சேவைகளுக்கும் தடையும், அச்சுறுத்தல்களும் | | | | |
| 15. | 5 செப். 2014 | வலிகாமம் வடக்கு (யாழ்ப்பாணம் மாவட்டம்) | இராணுவ அச்சுறுத்தலின் காரணமாக யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தடவையாக இடம்பெயர்ந்தவர்களுக்கான பிரார்த்தனைகள் இரத்து | http://www.tamilguardian.com/article.asp?articleid=12108 |
| 16. | 20 அல்லது 21செப். 2014 | யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் மாவட்டம்) | யாழ்ப்பாணத்தில் ரஜனி திராணகம நினைவுதினம் குழப்பப்பட்டது | http://www.thehindu.com/news/international/south-asia/revisiting-a-tamil-democrats-legacy/article6436119.ece |
| 17. | 21செப். 2014 | மட்டக்களப்பு மாவட்டம் | மட்டக்களப்பில் கொல்லப்பட்ட சிவிலியன்களின் நினைவுதினத்தை இரு வாரங்களில் 2ஆவது தடவையாக நீதிமன்றம் நிறுத்தியது | http://tamilnet.com/art.html?catid=13&artid=37392 |
| 18. | 9 செப். 2014 | சத்துருக் கொண்டான் (மட்டக்களப்பு மாவட்டம்) | சத்துருக்கொண்டானில் கொல்லப்பட்ட குடிமக்களின் நினைவுதினத்தை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு | http://tamilnet.com/art.html?catid=13&artid=37375 |
| ஈ. **ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்கள்** | | | | |
| 19. | 15-17 செப். 2014 | கொழும்பு/ பாங்கொக் | சர்வதேச மகாநாட்டுக்கு இரு மனித உரிமைக்காவலர்களின் அழைப்பை நிறுத்துமாறு சிட்னி பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு அமைச்சு அழுத்தம் | http://www.smh.com.au/world/academic-tells-conference-delegates-not-to-upset-sri-lanka-over-human-rights-20140912-10fzdq.html |
| 20. | 27செப். 2014 | நீர்கொழும்பு (கம்பஹா மாவட்டம்) | இன்னொரு ஊடகச் செயலமர்வைப் பொலிஸ் அச்றுத்தல்கள் குழப்பின | http://srilankabrief.org/2014/09/sri-lanka-police-together-with-pro-govt-mob-disrupts-one-more-media-workshop/ |


| | | | | |
|---|---|---|---|---|
| 21. | செப். 2014 | திருகோணமலை மாவட்டம் | ஒரு சிவில் சமூக கருத்தரங்கு தடைசெய்யப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது | ஊடகங்களில் அறிக்கையிடப்படவில்லை |
| 22. | 16 செப். | அனுராதபுரம் மாவட்டம் | சிவில் சமூகப் பயிற்சியொன்று பொலிசாரினால் இரத்துச் செய்யப்பட்டது | ஊடகங்களில் அறிக்கையிடப்படவில்லை |
| 23. | 21 செப். 2014 | கட்டுக்குருந்த (களுத்துறை மாவட்டம்) | எதிர்ப்புத் தெரிவித்த கத்தோலிக்கர்கள் மீது பொலிசாரினால் கண்ணீர்ப்புகை தாக்குதல் மற்றும் நீர் பீச்சியடிப்பு | http://www.ucanews.com/news/tear-gas-water-canons-used-on-protesting-sri-lankan-catholics/72006 |
| **உ. மாணவ செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அடக்குமுறை** | | | | |
| 24. | 14 செப். 2014 | மொனராகலை (மொனரகலை மாவட்டம்) | மொனராகலையில் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டனர் | http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7601:sabaragamuwa-students-threatened-at-monaragala-&catid=42:smartphones&Itemid=74 |
| 25. | 9 செப். 2014 | ஹோமாகம (கொழும்பு மாவட்டம்) | மாணவத் தலைவர்களைத் தேடி பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தைப் பொலிசார் சுற்றிவளைப்பு | http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=11835:police-surround-buddhist-and-pali-university-search-for-iusf-representatives&catid=150:lead-news&Itemid=113 |
| **ஊ. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளை அடக்குதல்** | | | | |
| 26. | 19/20 செப். 2014 | ரிதிமலியத்த (பதுளை மாவட்டம்) | எதிர்க்கட்சி தலைவர் ஒருவரின் வாசஸ்தலத்தில் உள்ள அவரது அலுவலகம் எரியூட்டப்பட்டது | http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7626:vidyaratnas-office-at-his-residence-torched&catid=42:smartphones&Itemid=74 |
| 27. | 10 செப். 2014 | | இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (இ.த.க.) "பயமுறுத்தலை" மட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு செயலாளர் விரும்புகிறார் | http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=110143 |
| 28. | 19 செப். 2014 | ஊவா மாகாணம் (பதுளை மற்றும் மொனராகல மாவட்டங்கள்) | எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் பட்டியலை அமைச்சரின் செயலாளர் கோருகின்றார் | http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7623:audio-siripala-wants-a-list-jvp-goes-to-hrc&catid=42:smartphones&Itemid=74 |

## அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

**1. பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரைச் சந்தித்தமைக்காக முல்லைத்தீவு தமிழ்க் குடும்பத்திற்கு அச்சுறுத்தல்**

முல்லைத்தீவில் உள்ள தமிழ் குடும்பமொன்று இருந்த வீட்டுக்கு பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஜோன் ரன்கின் விஜயம் செய்ததைத் தொடர்ந்து, அக் குடும்பம் இலங்கையின் இராணுவப் புலனாய்வு அலுவலர்களால் அச்சுறுத்தப்பட்டது. முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புப் பிராந்தியத்திற்கு உயர் ஸ்தானிகர் பிரயாணம் செய்ததுடன், தமிழ் குடும்பங்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளையிட்டு அவர்களுடன் அளவளாவினார். அவரது விஜயத்தைத் தொடர்ந்து, அவர் சென்ற வீடொன்றுக்குச் சென்ற புலனாய்வு அலுவலர்கள் அக் குடும்பத்தினரைப் அச்சுறுத்தினார்கள் என யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட 'உதயன்' பத்திரிகை அறிக்கையிட்டிருந்தது.
http://tamilguardian.com/print.asp?articleid=12073

**2. தமிழ் கத்தோலிக்க மதகுருவின் கவிதை குறித்து யாழ்ப்பாணத்தில் அவரை TID விசாரித்தது**




இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பிய கத்தோலிக்க மதகுருவொருவர் "உயிர்ப்பதிவு" என்ற தலைப்பில் எழுதிய தமிழ்க் கவிதைப் புத்தகமொன்று குறித்து பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) விசாரணை நடத்தியது. யாழ்.கத்தோலிக்க மேற்றிராணியார் இல்லத்தில் TIDஐச் சேர்ந்த மூன்று அலுவலர்களினால் செப்ரெம்பர் 3 அன்று மதகுரு விசாரிக்கப்பட்டார். 2009இல் யுத்தத்தின் இறுதி மாதங்களின் போது மதகுரு நேரில் கண்ட தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகிய மீதான வான் குண்டுத்தாக்குதல்கள் பற்றியும், தனது கவிதைகளில் அவை குறித்து அவர் எழுதியவை பற்றியும் விசாரணை நோக்கினைக் கொண்டிருந்தது. வடக்கில், முன்னாள் மோதல் வலயம் ஊடாக பிரதான நெடுஞ்சாலையான A9 வீதியின் நெடுகிலும் புதிய புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளமையைக் குறிப்பிடுகின்ற கவிதை பற்றியும் மதகுருவிடம் TID விசாரணை செய்தது.
http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/475-sri-lankas-anti-terror-squad-grills-priest-school-teachers-over-tamil-poetry-book

**3. "உயிர்ப்பதிவு" கவிதைப் புத்தகத்தின் விநியோகம் குறித்து அதிபர்கள் துருவித்துருவி விசாரணை**

கிளிநொச்சியில் கவிதைப் புத்தகத்தை விநியோகிப்பதில் அவர்களது வகிபங்கு குறித்து ஒக்ரோபர் முதல் வாரத்தின் போது TIDஇனால் அப்பகுதியில் உள்ள ஆகக்குறைந்தது மூன்று பாடசாலை அதிபர்கள் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். செப்ரெம்பர் 4 அன்று ஊடகங்கள் மத்தியில் பேசுகையில் இந்த நடவடிக்கை "மிகக் கொடுமையானது" என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் வன்மையாகக் கண்டித்ததுடன், பகுதியில் உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் தபால் மூலம் அனுப்பப்பட்ட புத்தகங்களையே பெருமளவு அதிபர்கள் பெற்றுள்ளதாகத் தெரிவித்திருந்தார். "இது வெறுமனே ஒரு கவிதைப் புத்தகமாகும். கவிதைகளை வாசிப்பதற்காக மக்கள் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்படுமானால், இது வடக்கில் நிலவுகின்ற பேச்சுச் சுதந்திரத்தின் மட்டத்தை எடுத்துக்காட்டுகின்றது" என அவர் கூறினார். http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/475-sri-lankas-anti-terror-squad-grills-priest-school-teachers-over-tamil-poetry-book

**4. இரு மனித உரிமைகள் வழக்கறிஞர்கள்/மனித உரிமைகள் காப்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்**

Lawyers Collectiveஇன் முன்னணிவாய்ந்த உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் மஞ்சுள பத்திராஜா ஆகியோர் விளங்குவதுடன், 2014 செப்ரெம்பர் 13 அன்று கொழும்பு மாவட்டத்தில் உள்ள களனிய, தொரன சந்திக்கு அருகில் அமைந்துள்ள திரு.ராஜபக்ஷவின் சட்ட அலுவலகத்திற்குப் பிரவேசித்த இருவரினால் அவர்கள் இருவருக்கும் மரணப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது. இரு வழக்கறிஞர்களும் முன்னணிவாய்ந்த மனித உரிமைகள் காப்பாளர்களாக உள்ளதுடன், மனித உரிமைகள் மீறப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதில் நீண்ட அனுபவத்தைக் கொண்ட வழக்கறிஞர்களாகவும் விளங்குகிறார்கள். பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட அரசாங்கத்தின் சகல உறுப்புக்களின் தன்னிச்சையிலான நடவடிக்கைகளுக்கு சவால்விடுக்கும் ஒரு தொடரிலான கூருணர்விலான வழக்குகளில் அவர்கள் ஆஜராகியுள்ளனர். அத்துமீறி வந்தவர்களில் ஒருவர் ஆயுதம் தரித்திருந்ததுடன், மூலையொன்றுக்கு ராஜபக்ஷவை அவர் கொண்டுசென்று, "தேவையற்ற வழக்குகளில்" அவர்கள் ஆஜரானால் அவரும், மஞ்சுள பத்திரனவும் கொல்லப்படுவார்கள் என அச்சுறுத்தினார். சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு ஒருவருக்கு எதிராக ராஜபக்ஷவும், பத்திராஜாவும் ஆஜராகிய பெருமளவு வழக்குகள் பற்றி அவர்கள் குறிப்பாக்க் குறிப்பிட்டார்கள். அந்த இரு தனிப்பட்டவர்களும் அடையாளங் காணமுடியாத மோட்டார் சைக்கிளொன்றில்

பறந்தோடிவிட்டார்கள். பேலியகொட பொலிஸ் நிலையத்தில் ராஜபக்ஷ முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். முறைப்பாட்டின் எண் CIB/III – 230/123.
http://www.ft.lk/2014/09/16/lawyers-collective-condemns-death-threats-to-attorneys/

## 5. தொழிற்சங்க உறுப்பினர்களும், தலைவர்களும் தாக்கப்பட்டனர்




தாக்குதலுக்கு எதிராக அரசாங்க அச்சகத்தின் தொழிற்சங்கம் எதிர்ப்பு தெரிவிக்கின்றது [Photo: Daily Mirror]

எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளுடன் இணைந்துள்ள தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும், தலைவர்களும் அரசியல்ரீதியாக நியமிக்கப்பட்ட அரசாங்க அச்சகர் திரு.லலித் டீ சில்வாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளியார் கோஷ்டியொன்றினால் தாக்கப்பட்டதாக தொழிற்சங்கத் தலைவர்கள் சார்த்துரைக்கின்றனர். வெளிப்படையான அரசியல் தொடர்புகளுடனான வெளியார் ஒருவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும் எனக் கூறி அரசியல் அடிப்படையின் மீது அச்சகராக திரு.சில்வாவின் நியமனத்திற்கு எதிராக இந்தத் தொழிற்சங்கங்கள் கிளர்ந்தெழுந்தன. தாக்குதலின் விளைவாக கொழும்பு பொது வைத்தியசாலையில் ஒரு தொகையிலான தொழிற்சங்கத் தலைவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.
https://www.facebook.com/lankaenews/posts/787788224619678 (In Sinhala)

## 6. பிரதி பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் பின்தொடரப்பட்டதுடன், கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டார்

தன்னைக் கவனித்ததாகவும், தான் கண்காணிப்புக்கு உட்பட்டதாகவும், தன்னைச் சந்தித்தவர்கள் பின்தொடர் வருகைதரல்களையும், தொலைபேசி அழைப்புக்களையும் கொண்டிருந்ததாகவும், தான் என்ன செய்ததாகவும், சொன்னதாகவும் பிரதி பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் திருவாட்டி லோரா டேவிஸ் தெரிவித்திருந்தார். இவற்றில் சில "கேலிக்குரியதாக" இருந்த அதேவேளை, ஏனைய தருணங்கள் தனிப்பட்டவர்களுக்கும், குடும்பங்களுக்கும் பயமுறுத்துவதாக இருந்தன என திருவாட்டி டேவிஸ் அறிக்கையிட்டுள்ளார். தன்னைச் சந்திப்பதற்கு பெருமளவு மக்கள் அதிகளவு அச்சத்தைக் கொண்டிருந்ததாக அவர் மேலும் அறிக்கையிட்டிருந்தார்.
http://blogs.fco.gov.uk/lauradavies/2014/09/30/looking-over-my-shoulder/

## 7. தடுத்துவைக்கப்பட்ட காணாமல் போனோர் எதிர்ப்பு பிரச்சாரகர் பயங்கரவாத ஆதரவாளர் ஒருவராகச் சித்தரிப்பு


ඔබ මැය ගැන දන්නවාද?

නම - බාලේන්ද්‍රන් ජෙයකුමාරි

පදිංචිය - කිලිනොච්චිය ප්‍රදේශය

දේශමාමක ජාතික ව්‍යාපාරය

2014 செப்ரெம்பர் 23 அன்று கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரே நடைபெற்ற ஜெயகுமாரியை விடுவிக்கும் இயக்கத்திற்கு அருகில் அங்கு பிரசன்னமாகியிருந்த மனித உரிமைகள் பாதுகாவலர்களின் கூற்றின் பிரகாரம் ஆளும் கட்சியின் சுமார் 30 ஆதரவாளர்களினால் எதிர் இயக்கமொன்று பொலிசாரின் பாதுகாப்புடன் நடத்தப்பட்டது. இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமல் போன தனது மகன் உட்பட காணாமல் போனோர் தொடர்பில் உண்மைக்கும், நீதிக்குமான பிரசித்தமான பிரச்சாரகர் திருமதி பாலேந்திரன் ஜெயகுமாரியை விடுவிக்குமாறு "ஜெயகுமாரியை விடுவிக்க" என்ற இயக்கம் கோரியிருந்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைப் புத்துயிரூட்டுகின்றவர்களுக்கு அவர் அடைக்கலம் கொடுத்தார் என்பதைச் சுட்டிக்காட்டி, துண்டுபிரசுரமொன்றும் விநியோகிக்கப்பட்டது.

அவர் ஒரு வாய்மொழியானதும், வெளிப்படையானதுமான காணாமல் போனோர் எதிர்ப்பு பிரச்சாரகர்; அவருக்கு எதிராகச் சாட்சியம் உள்ளது என வலியுறுத்தப்பட்ட போதிலும், 200 நாட்களுக்கு அவர் குற்றஞ்சாட்டப்படவில்லை என்ற உண்மையை துண்டுப்பிரசுரம் உதாசீனம் செய்திருந்தது.

## 8. நம்பிக்கைத் துரோகச் செயற்பாடுகளுக்கு மனித உரிமைகள் காவலர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர்


அதே எதிர்ப்புப் போராட்டத்தில், இலங்கையின் முன்னணிவாய்ந்த மனித உரிமைகள் காவலர்களைக் காட்டும் பதாகையொன்று காட்சிப்படுத்தப்பட்டது. இது அவர்களைக் கேலிசெய்ததுடன், நாட்டுக்கு எதிரான நம்பிக்கைத் துரோகச் செயற்பாடுகளுக்காக அவர்களைக் குற்றஞ்சாட்டியிருந்தது. பதாகையில் வலது புறத்திலிருந்து இடப்புறத்திற்கு: சகலவிதமான பாகுபாட்டினதும், இனவாதத்தினதும் சகல வடிவங்களுக்கும் எதிரான சர்வதேச இயக்கத்தின் (IMADR) தலைவர் கலாநிதி நிமால்கா பெர்னாண்டோ, சட்டத்தரணியும், Rights Now Collective for Democracy நிறைவேற்றுப் பணிப்பாளருமான சுதர்ஷன குணவர்தன; இதழியலாளரும், இணையதள இதழியலாளர் சங்கத்தின் கூட்ட அழைப்பாளருமான ஃப்ரெடி கமகே; எழுத்தாளரும், INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையத்தின் ஆலோசகருமான "ருக்கி பெர்னாண்டோ" ; 'காணாமல் போனோர் குடும்பங்களின்' தலைவர் "பிரிட்டோ பெர்னாண்டோ", மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் அங்கிலிக்கன் மதகுரு வண.பிதா சக்திவேல்.



பதாகை: இந்த தேசத்துரோகிகளை உங்களுக்கு அடையாளம்தெரிகிறதா? [Photo: twitter]

## ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

**9. சிறந்த நாவலுக்கான இலக்கிய விருது தீவிரவாதபோக்குடையவர்களின் எதிர்ப்பின் பின் நிறுத்தப்பட்டது**



[Photo; Manjula Wediwardana Face Book]

மஞ்சுள வெடிவர்தனவினால் எழுதப்பட்ட "மகே ஆதரனிய யக்ஷனி" (எனது அன்பார்ந்த பிசாசே) என்ற சிங்கள நாவலை "சுவர்ண புஸ்தக சாஹித்ய சம்மானய"வின் (பொன்மய நூலுக்கான இலக்கிய விருது) ஐந்து நடுவர்களில் நால்வர் 2014இன் சிறந்த நாவலுக்கான விருதினைப் பரிந்துரைத்திருந்தனர். அவர்களது முடிவு நான்கு நடுவர்களினால் அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சிங்கள பௌத்த தீவிரவாதப்போக்குடைய சக்திகளினாலான அச்சுறுத்தல்களின் காரணமாக, இன்னொரு நாவலுக்கு விருது வழங்கப்பட்டது. அந்த நாவலை தேசத்திற்கு எதிரானது எனவும், அதன் ஆசிரியர் மஞ்சுள வெடிவர்தனவை பிரதானநீரோட்ட ஊடகங்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் தேசத்துரோகியொருவராகவும் தீவிரவாதப்போக்குடையவர்கள் நாமம்

சூட்டினார்கள். விருது வெற்றியீட்டிய எழுத்தாளரும், இதழியலாளரும் மற்றும் மனித உரிமைகள் காவலருமான மஞ்சுள வெடிவர்தன அவர் முகங்கொடுத்த அச்சுறுத்தல்களின் காரணமாக 2009 முதல் வெளிநாட்டில் தலைமறைவாக வாழ்கின்றார். வெடிவர்தனவின் நூலுக்கு விருது வழங்கப்பட்டால் தாம் விருது வழங்கும் விழாவுக்கு பலாத்காரமாகப் பிரவேசிப்போம் என தீவிரவாதப்போக்குடைய குழு அச்சுறுத்தியுள்ளது.
http://srilankabrief.org/2014/09/religious-extremists-threatened-not-to-select-mage-adaraneeya-yakshni-my-beloved-demoness-for-best-novel-award-2014/
Article by Gunadasa Amasekara in Sinhala at: http://www.lakbima.lk/index.php?option=com_content&view=article&id=39610:2014-09-12-12-32-43&catid=48:2012-04-02-08-50-52&Itemid=75

## 10. பொன்மய நூலுக்கான இலக்கிய விருதின் நடுவர் குழாம் “டொலர் காகங்கள்” மற்றும் “சமாதானக் காகங்கள்” என நாமம் சூட்டப்பட்டது

2014 செப்ரெம்பர் 14 அன்று ஞாயிறு சிங்கள வாராந்தரியான “லக்பிம”வில் சிங்கள குறுகியவாதத்தின் முன்னணிவாய்ந்த தத்துவாசிரியர்களில் ஒருவரான கலாநிதி குணதாச அமரசேகர பின்வருமாறு கூறியிருந்தார்: “நடுவர்களின் குழாமுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிலர் எப்பொழுதுமே அரச சார்பற்ற தாபனங்களைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் டொலர் காகங்கள், சமாதானக் காகங்கள், அவர்கள் அப்பாவிகள் அல்லர். அவர்கள் தமது சொந்த நிகழ்ச்சிநிரல்களைக் கொண்டுள்ளார்கள். இது அண்மையில் நன்கு அறியப்பட்ட இலக்கிய விழாவில் வெளிச்சத்திற்கு வந்தது. நடுவர்களின் அரச சார்பற்ற தாபன குழாமானது புலி முகவர் ஒருவரினாலான நாவலொன்றைத் தெரிவு செய்துள்ளதை நான் அறிந்துகொண்டேன். இதை எம்மால் அனுமதிக்க முடியாது. இது அபாயகரமானது”. கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, கலாநிதி ஹர்ஷா ரம்புக்வெல, திரு.லயனல் பெர்னாண்டோ மற்றும் திரு சமன் விக்ரமஆரச்சி ஆகிய நான்கு நடுவர்களே தாக்கப்பட்டனர்.
http://srilankabrief.org/2014/09/religious-extremists-threatened-not-to-select-mage-adaraneeya-yakshni-my-beloved-demoness-for-best-novel-award-2014/
மஞ்சுள வெடிவர்தனவும், நீதிபதிகளின் குழாத்தினரும் பிரிவினைவாதிகள் என செப்ரெம்பர் 25இன் சிங்கள தினசரியான 'திவயின'வில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் இன்னொரு தேசியவாத எழுத்தாளரான திரு.சேன தோரதெனிய குற்றஞ்சாட்டியிருந்தார்.
http://www.divaina.com/2014/09/25/sarasavi%204.html

## 11. கலகத்திற்குப் பிந்திய அளுத்கமவில் செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர் ஒருவரை இராணுவம் தடைசெய்தது



**“இது இராணுலத்தினால் ஆட்சிசெய்யப்படும் இராணுவப் பகுதி; முன்கூட்டிய அனுமதியின்றி இதழியலாளர்களுக்கு அனுமதியில்லை” என இதழியலாளருக்கு அலுவலர் கூறுகின்றார்.** [Photo: screen shot of the Lanka Irida video]

அளுத்கம முஸ்லிம் பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அப்பகுதி இராணுவத் தளபதியினதும், இராணுவத்தினதும் ஆட்சியின் கீழ் இருக்கின்றன என்ற காரணங்களின் நிமித்தம் “லங்கா இரிதா” வாராந்த செய்திப்பத்திரிகையைச் சேர்ந்த இதழியலாளர்களைத் தடுத்தனர். லங்கா ட்ருத் என்ற இணையதளத்தில் மேலேற்றப்பட்ட வீடியோ ஒன்றில், “இது ஒரு சிவிலியன் கட்டுப்பாட்டுப் பகுதி அல்ல” என்ற காரணத்தினால் முன்கூட்டிய அனுமதியின்றி அவரால் பிரவேசிக்க முடியாது என இதழியலாளர் ஒருவருக்கு இராணுவ பொலிசையும், இராணுவத்தையும் சேர்ந்த அலுவலர்கள் 'கமெரா' முன்பாக கூறுகின்றார்கள்.

http://srilankabrief.org/2014/09/religious-extremists-threatened-not-to-select-mage-adaraneeya-yakshni-my-beloved-demoness-for-best-novel-award-2014/
https://www.youtube.com/watch?v=rqOOIIjivig#t=163இல் தடுக்கப்பட்டமை சம்பந்தமான “வீடியோ” கிட்டுகின்றது (சிங்களத்தில் நிமிடங்கள் 2.12 - 2.45)

## 12. வடக்கில் கொலை முயற்சியொன்றிலிருந்து தமிழ் இதழியலாளர் தப்பினார்

யாழ்ப்பாண தினசரியான “உதயனின்” பகுதி நிருபர் ஒருவரான திரு.சின்னராசா சிவேந்திரனை (33) கொல்வதற்கு பாதுகாப்பு முகவர்களின் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் முயற்சித்தனர். தமிழ் தினசரியான “உதயன்” அலுவலகத்திலிருந்து செய்திகளை எழுதிய பின்னர் A9 வீதியில் தனது சைக்கிளில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த திரு.சிவேந்திரனை இரு முகமூடியணிந்தவர்கள் நிறுத்தினார்கள். இருவரும் தம்மைப் பொலிஸின் குற்றவியல் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் என அறிமுகப்படுத்தியதுடன், அவரை 10 நிமிடங்களுக்கு விசாரணை செய்தனர். இதழியலாளரைத் தாக்கிய பின்னர், அவரைக் கொல்லும் முயற்சியாக வேகமாக வந்த பஸ் ஒன்றின் முன்பாக அவரைத் தள்ளுவதற்கு முகமூடியணிந்தவர்கள் முயற்சித்தனர். எனினும், வீதியில் கிடந்த இதழியலாளரைக் கண்ட அங்கு வந்த வாகனத்தின் சாரதி தனது வாகனத்தைத் திருப்பியதனால், கொலை முயற்சி தோல்வியடைந்தது. உணவகமொன்றை நோக்கி திரு.சிவேந்திரன் ஓடினார், அவரைத் துரத்தி வந்த முகமூடி அணிந்தவர்களை எதிர்நோக்குவதற்கு பொதுமக்கள் ஒன்றுகூடினர். A9 வீதி மீது வாகனத்தின் முன்பாக இதழியலாளரைத் தள்ளுவதற்கு முயற்சிப்பதற்கு முன் முகமூடியை அணிந்தவர்களில் ஒருவர் தனது முகமூடியை கழற்றியதனால், அவரைத் தன்னால் அடையாளம் காண முடியும் என பொலிசாருக்கான தனது முறைப்பாட்டில் சிவேந்திரன் தெரிவித்திருந்தார்.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37389

## 13. யாழ்ப்பாணம் பத்திரிகைச் சுதந்திரச் செயற்பாட்டாளர் விசாரிக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார்

ஊடக அறிக்கைகளின் பிரகாரம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) மற்றும் குற்றவியல் விசாரணைப் பிரிவு (CID) போன்ற பாதுகாப்பு அமைச்சினால் செயற்படுத்தப்படும் “விசாரணை” அலகுகளினால் தொடர்ச்சியான விசாரணைக்கும், அச்சுறுத்தலுக்கும் மற்றும் தொந்தரவுக்கும் யாழ்ப்பாணத்தில் ஊடக செயற்பாட்டாளரான தயாபரன் இரத்தினம் உட்பட்டுள்ளார். கொழும்பிலும், வேறு மாகாணங்களிலும் ஊடகப் பயிற்சிச் செயலமர்வுகளில் பங்கெடுப்பதற்கு வடக்கைத் தளமாகக் கொண்ட தமிழ் இதழியலாளர்கள் முயற்சி செய்த பின்னர் இது ஆரம்பித்துள்ளதாகத் தோன்றுகின்றது. ஊடகச் செயலமர்வொன்றுக்கு கொழும்புக்குச் செல்லும் வழியில் இராணுவத்தினாலும், பொலிசினாலும் தடுத்து நிறுத்தப்பட்ட இதழியலாளர்கள் மத்தியில் திரு.தயாபரன் விளங்குகின்றார். அரசாங்க ஆதரவாளர்கள் என நம்பப்படும் கோஷ்டியொன்றினாலான எதிர்ப்பினதும், அச்சுறுத்தல்களினதும் காரணமாக செயலமர்வு இரத்துச் செய்யப்படவேண்டியிருந்தது. யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்துடன் இணைந்துள்ள திரு.தயாபரனிடம் சர்வதேச ஊடகக் கண்காணிப்பாளர்களுடனான தொடர்பு பற்றியும், தெற்கிலிருந்து இதழியலாளர்களுடனான பயிற்சிச் செய்திட்டங்கள் பற்றியும் மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகச் சுதந்திரத்திற்கு எதிர்ப்பொன்று பற்றியும் விசாரிக்கப்பட்டதாக ஊடக அறிக்கைகள் எடுத்துக்காட்டியிருந்தன. கடந்த காலத்தில் எல்.ரி.ரி.ஈ. தொடர்புகள் பற்றிய தவறான சார்த்துரைகள் பற்றியும் அவர் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அறிக்கையிடப்பட்டுள்ளது.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37400

## 14. ஊவா மாகாண சபை தேர்தல்களின் பின்னர் இதழியலாளர்கள் தாக்கப்பட்டனர்

இலங்கையின் சுதந்திர ஊடக இயக்கம் என்ற media freedom watchdogஇன் பிரகாரம், 2014 செப்ரெம்பர் 22 அன்று பதுளை மாவட்டம், ஹாலிஎலவில் அரசாங்க அரசியல்வாதிகளின் தலைமையிலான அரசாங்கச் சார்பு கோஷ்டியொன்றினால் இரு சிங்கள இதழியலாளர்கள் தாக்கப்பட்டார்கள். எம்.ரி.வி மற்றும் சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிலையங்களின் இதழியலாளரான சந்தன குருப்புஆரச்சி மற்றும் நாளாந்த தினசரியான “லங்கா தீப”வின் பதுளைப் பகுதி நிருபரான இதழியலாளரான பாலித ஆரியவன்ஸ ஆகியோரே கோஷ்டியொன்றினால் தாக்கப்பட்டவர்களாவர். அண்மையில் (2014 செப்ரெம்பர் 20) முடிவடைந்த ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின்னர் எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளுக்கு எதிராக அரசாங்க சார்பு கோஷ்டிகளினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தேர்தலுக்குப் பிந்திய வன்முறையின் அங்கமே இந் நிகழ்வாகும் என FMM குற்றஞ்சாட்டியிருந்தது. பதுளை பொது வைத்தியசாலைக்கு இதழியலாளரான சந்தன குருப்புஆரச்சி அனுமதிக்கப்பட்டு, பின்னர் கோஷ்டியினால் இழைக்கப்பட்ட பாரதூரமான காயங்களைத் தொடர்ந்து சிகிச்சைக்காக இரு தனியார் வைத்தியசாலைகளுக்கு இடமாற்றப்பட்டார்.
http://srilankabrief.org/2014/09/sri-lanka-journalists-assaulted-in-north-and-south/#more-20280

## இ. வடக்கிலும், கிழக்கிலும் நினைவு தினங்களுக்கும், பிரார்த்தனை சேவைகளுக்கும் தடையும், அச்சுறுத்தல்களும்

### 15. இராணுவ அச்சுறுத்தலின் காரணமாக யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தடவையாக இடம்பெயர்ந்தவர்களுக்கான பிரார்த்தனைகள் இரத்து

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கின் இடம்பெயர்ந்த மக்களுக்காக நடைபெறவிருந்த பிரார்த்தனைகள் இரண்டாவது தடவையாக இலங்கையின் இராணுவ அச்சுறுத்தலின் காரணமாக இரத்துச் செய்யப்பட்டன. 2014 செப்ரெம்பர் 5 அன்று வலிகாமம் வடக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்க்காக ஒழுங்குபடுத்தப்பட்ட பிரார்த்தனைகள் நடைபெற்றால் “பின்விளைவுகளுக்கு” முகங்கொடுக்க நேரிடுமென்று ஒழுங்கமைப்பாளர்களை இராணுவப் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தியுள்ளனர். சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் இணைப் பிரார்த்தனைகள் நடைபெறவிருந்ததுடன், நிலையத்திற்கு இராணுவம் வந்த போது பிரார்த்தனைகள் ஏற்கனவே தயார்நிலையில் இருந்தன. இவ்வைபவத்திற்காக நிறுவப்பட்டிருந்த கூடாரத்தை அகற்றுமாறு ஒழுங்கமைப்பாளர்களை இராணுவம் எச்சரிக்கை செய்தது.
http://www.tamilguardian.com/article.asp?articleid=12108

### 16. யாழ்ப்பாணத்தில் ரஜனி திராணகம நினைவுதினம் குழப்பப்பட்டது

யாழ்ப்பாணத்தில் அவரது சகபாடிகளினாலும், தோழர்களினாலும் மற்றும் குடும்பத்தினராலும் ஒழுங்குசெய்யப்பட்ட கலாநிதி ரஜனி திராணகம நினைவுதினம் நடைபெறவிருந்த இடங்கள் தடைசெய்யப்பட்டதுடன், நிகழ்ச்சியின் அங்கமொன்றான அமைதியான பேரணியொன்றும் பொலிசாரினால் தடுக்கப்பட்டது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR-Jaffna) தாபன உறுப்பினரான கலாநிதி திராணகம 25 வருடங்களுக்கு முன் எல்.ரி.ரி.ஈ.இனால் சுட்டுக்கொல்லப்பட்டார். கலாநிதி திராணகம சேவையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கூட்டமொன்றை நடத்துவதற்கான மண்டபமொன்றை அமைப்பாளர்கள் முன்கூட்டியே பதிவுசெய்திருந்ததுடன், பேரணியொன்றை நடத்துவதற்கு பொலிஸ் அனுமதியும் பெறப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சி நடப்பதற்கு சில தினங்களுக்கு முன் இரண்டுமே இரத்துச்செய்யப்பட்டன. பின்னர், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் கருத்தரங்குகளில் ஒன்றை நடத்துவதற்காக அமைப்பாளர்களினால் பெறப்பட்டிருந்த அனுமதியை சம்பந்தப்பட்ட மாநகர சபை அலுவலர்கள் இரத்துச்செய்தனர். இறுதியாக, தேவாலயமொன்றின் வளவில் நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால், குற்றவியல் விசாரணைப் பிரிவின் உறுப்பினர்கள் எனத்தம்மை அறிமுகப்படுத்திய சிலர் நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு வருகைதந்து, நிகழ்ச்சியின் விபரங்களைக் குறித்துக்கொண்டனர். காலஞ்சென்ற கலாநிதி திராணகமவின் கணவர் யாழ்ப்பாணத்தில் இராணுவத் தளபதியினால் வரவழைக்கப்பட்டார்.
http://www.thehindu.com/news/international/south-asia/revisiting-a-tamil-democrats-legacy/article6436119.ece

### 17. மட்டக்களப்பில் கொல்லப்பட்ட சிவிலியன்களின் நினைவுதினத்தை இரு வாரங்களில் 2ஆவது தடவையாக நீதிமன்றம் நிறுத்தியது

2014 செப்ரெம்பர் 21 அன்று, இரு வாரங்களில் இரண்டாவது தடவையாக நினைவுதினம் “அமைதிக்கு குழப்பம் விளைவிக்கும்” என்ற காரணத்தின் நிமித்தம் நீதிமன்ற உத்தரவொன்றை பெற்றதன் மூலம் நினைவுதின நிகழ்ச்சியொன்றை மட்டக்களப்பில் பொலிஸ் தடைசெய்ததாகக் கூறப்படுகின்றது (முதலாவது சம்பவத்திற்கு கீழே பார்க்க). ஊர்க்காவல் படையினால் (இலங்கையின் பொலிசின் கீழ் செயற்பட்ட கிராம மட்டத்திலான ஓர் இராணுவப் படை) 1990இல் கொல்லப்பட்ட 17 குடிமக்களின் சிலைக்கு முன்பாக வருடாந்த நினைவுதின வைபவத்தை அனுஷ்டிப்பதற்கு 1990இல் புதுக்குடியிருப்பில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஒன்றுகூடியிருந்த போது தொந்தரவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஞாபகார்த்த அமைவிடத்தில் மெழுகுவர்த்திகளை மக்கள் பற்றவைப்பதற்கு ஆரம்பித்த போது, தாம் பெற்றுக்கொண்ட நீதிமன்ற உத்தரவொன்றின் அடிப்படையில் பொலிஸ் அலுவலர்கள் அவர்களை இடைமறித்தனர். கொல்லப்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக தமது மெழுகுவர்த்திகளை ஏற்றுவதற்காக ஆலயமொன்றைக் கண்டறியுமாறு மக்களுக்கு பொலிசார் அறிவுறுத்தினார். பின்னர், அண்மையில் உள்ள ஆலயமொன்றில் மக்கள் கூடிய போது, மக்களை அச்சுறுத்துவதற்காக கலகம் அடக்கும் பொலிசார் அங்கு வரவழைக்கப்பட்டனர்.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37392

**18. சத்துருக்கொண்டானில் கொல்லப்பட்ட குடிமக்களின் நினைவுதினத்தை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு**




பகுதியில் அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் நிகழ்ச்சி மீது நீதிமன்றத் தடை உத்தரவைப் பொலிசார் பெற்றனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக்கொண்டானில் கொல்லப்பட்ட சிவிலியன்களுக்காக செப்ரெம்பர் 9 அன்று நினைவு தின நிகழ்ச்சியொன்றை நீதிமன்றம் தடைசெய்தது. இத்தகையதொரு நினைவு தினமொன்று "அமைதியைக் குழப்பலாம்" என நீதிமன்றத்திற்கு பொலிசார் கூறியுள்ளனர். கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத்தூபியின் விளக்குகளை ஏற்றுவதற்காக தடைசெய்யப்பட்டமை பற்றி தமது கவலையைப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் வெளிப்படுத்தினர்.
http://tamilnet.com/art.html?catid=13&artid=37375

## ஈ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீறல்கள்

**19. சர்வதேச மகாநாட்டுக்கு இரு மனித உரிமைக் காவலர்களின் அழைப்பை நிறுத்துமாறு சிட்னி பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு அமைச்சு அழுத்தம்**

அழைக்கப்பட்ட இரு மனித உரிமைக் காப்பாளர்களின் அழைப்பினை இரத்துசெய்யாவிட்டால் மகாநாட்டிலிருந்து மீளப்பெறப்போவதாகப் பாதுகாப்பு அமைச்சு அச்சுறுத்திய பின்னர், சர்வதேச மகாநாடொன்றுக்கு இரு இலங்கையின் மனித உரிமைத் தாபனங்களுக்கான அழைப்புக்களை சிட்னி பல்கலைக்கழகம் மீளப்பெற்றது. "ஆசிய பசுபிக்கின் மனித உரிமைகளையும், பந்தோபஸ்தையும் மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான மகாநாடு 2014 செப்ரெம்பர் 15-17 வரை தாய்லாந்து, பாங்கொக்கில் நடைபெற்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகாநாட்டுக்கு அழைக்கப்பட்ட இலங்கையில் உள்ள ஏனைய பிரதான அரச சார்பற்ற தாபனமும், பெருமளவு சர்வதேச மனித உரிமைகள் தாபனங்களும் மகாநாட்டிலிருந்து மீளப்பெற்றன. பாதுகாப்பு அமைச்சின் அழுத்தத்தின் காரணமாக அழைப்பு நிறுத்தப்பட்ட இரு மனித உரிமைக் காவலர்கள் முன்னணிவாய்ந்த மனித உரிமைகள் காவலர்கள் என்பதுடன், நன்கு அறியப்பட்ட இலங்கையின் இரு மனித உரிமை அரச சார்பற்ற தாபனங்களின் தலைவர்களாவர். அவர்களில் ஒருவரான திரு.பிரிட்டோ பெர்னாண்டோ 'Right to Life' என்ற தாபனத்தையும், திரு.சுதர்சன குணவர்தன, 'Rights Now Collective' என்ற தாபனத்தையும் சேர்ந்தவர்களாவர். இருவருமே உள்ளூர்ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் இலங்கை அரசாங்கத்தின் வாய்மொழியிலான பகிரங்க விமர்சகர்களாவர். மகாநாட்டில் இலங்கையின் இராணுவ ஆளணியினரை விமர்சிக்கக்கூடாது என்றும், "உயர்ந்தளவிலான கூருணர்வுத்தன்மையையும், எளிதில் முறிவடையும்தன்மையையும் இட்டு விழிப்புடன் இருக்க வேண்டும்" என்றும் அத்துடன் "இலங்கையின் சம்பந்தப்பட்டவர்களினால் செய்யப்படும் வலியுறுத்தல்களின் சட்டபூர்வதன்மையையிட்டு கேள்வியெழுப்புவதற்கு விரும்பும் தருணமொன்றாக நாம் அறிந்துகொள்வோம் என்பதையிட்டு நாம் எல்லோரும் கண்டறிவோம் என்பதையிட்டு சந்தேகமில்லை என்ற அதேவேளை, அத்தகைய எதிர்ப்புகள் உண்மையில் கொண்டிருக்கக்கூடிய குறைந்தபட்ச திட்டமான தாக்கத்தையும், மகாநாடு மீதான அவர்களின் உத்தேசரீதியிலான நாசகரமான தாக்கத்தையும் மனதில் வைத்திருக்குமாறு எம்மை நான் கேட்டுக்கொள்கின்றேன்" என மகாநாட்டுக்கான சர்வதேசப் பேராளர்களை மகாநாட்டு ஒழுங்கமைப்பாளர்கள் வலியுறுத்தினார்கள்.

http://www.smh.com.au/world/academic-tells-conference-delegates-not-to-upset-sri-lanka-over-human-rights-20140912-10fzdq.html

Copy of one of the letters from the University of Sydney is available at http://srilankabrief.org/wp-content/uploads/2014/09/Deinvite-letter-to-Right-to-Life.pdf



இடது புறத்தில் திரு.சுதர்சன குணவர்தன, வலது புறத்தில் திரு.பிரிட்டோ பெர்னாண்டோ (Photo: Internet)

## 20. இன்னொரு ஊடகச் செயலமர்வைப் பொலிஸ் அச்றுத்தல்கள் குழப்பின

இரு முன்னைய தருணங்களில் ஊடகச் செயலமர்வுகளைக் குழப்பிய “தேசத்தைக் கட்டியெழுப்பும் சங்கம்” என அழைக்கப்பட்ட பெயரைப் பயன்படுத்தி அரசாங்கப் புலனாய்வு முகவராண்மைகளினால் இன்னொரு ஊடகச் செயலமர்வு அச்சுறுத்தப்பட்டு, குழப்பப்பட்டது. செயலமர்வுகளை நடத்துவதற்கு இதழியலாளர்கள் தொடர்ந்துமே வந்தால், அவர்களுக்கு பாடங்கள் புகட்டப்படும் என தேசத்தைக் கட்டியெழுப்பும் சங்கத்தைச் சார்ந்த கோஷ்டி அச்சுறுத்தி வந்தது. வாழ்க்கைத்தொழில் இணையதள இதழியலாளர் சங்கத்தின் அழைப்பாளரைப் பொலிசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் அழைத்து, செயலமர்வு நடக்கவுள்ள இடமான நீர்கொழும்பில் உள்ள ராணி பீச் ஹொட்டேலைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் சங்கம் என அழைக்கப்படும் குழுவொன்று சுற்றிவளைக்கவுள்ளதாக கூறியுள்ளார். செயலமர்வின் பங்கெடுப்பாளர்களின் பாதுகாப்பினைப் பொலிசாரினால் உறுதிப்படுத்த முடியாது எனவும் அவரிடம் கூறப்பட்டுள்ளது. இதன் பின்னர், இந்தச் செயலமர்வை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என ஹொட்டேலின் உரிமையாளரை பொலிஸ் அலுவலர்கள் அச்சுறுத்தியுள்ளனர். இந்த அச்சுறுத்தலையும், பயமுறுத்தல்களையும் தொடர்ந்து வேறுபட்டதும், வெளியிடப்படாததுமான இடமொன்றுக்கு செயலமர்வை ஒழுங்கமைப்பாளர்கள் இடமாற்ற வேண்டியிருந்தது.
http://srilankabrief.org/2014/09/sri-lanka-police-together-with-pro-govt-mob-disrupts-one-more-media-workshop/

## 21. ஒரு சிவில் சமூக கருத்தரங்கு தடைசெய்யப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது

INFORMக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், செப்ரெம்பரின் இறுதிப் பகுதியில் இரு சிவில் சமூகத் தாபனங்களினால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலைப் பட்டினத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டமொன்று புலனாய்வு அலுவலர்களினால் குழப்பப்பட்டது. கூட்டம் நடைபெறவிருந்த இடத்துக்காகச் செய்யப்பட்ட முன்கூட்டிய பதிவை இரத்துச் செய்யுமாறு இடத்தின் அலுவலர்களை புலனாய்வு அலுவலர்கள் கட்டாயப்படுத்தியுள்ளனர். இன்னொரு இடத்தை முன்கூட்டியே பதிவுசெய்வதற்கு ஒழுங்கமைப்பாளர்கள் சமாளித்த போது, அதுவும் குழப்பப்பட்டதுடன், முற்றிலும் வேறுபட்ட இடமொன்றில் கூட்டம் நடத்தப்படுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. கூட்டத்தைப் புலனாய்வு அலுவலர்கள் தமது கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளனர்.

## 22. சிவில் சமூகப் பயிற்சியொன்று பொலிசாரினால் இரத்துச் செய்யப்பட்டது

INFORMக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், அனுராதபுரம் மாவட்டத்தில் 2014 செப்ரெம்பர் 16 அன்று பயிற்சிச் செயல்திட்டமொன்று அதன் நடுவழியில் இரத்துச் செய்யப்படுவதைப் பொலிசார் கட்டாயப்படுத்தினர். முன்னணிவாய்ந்த தேசிய அரச சார்பற்ற தாபனமொன்றினால் நிருவகிக்கப்படும் இடமொன்றில் வடக்கைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களுக்காக கொழும்பைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் தாபனமொன்றின் பயிற்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

**23. எதிர்ப்புத் தெரிவித்த கத்தோலிக்கர்கள் மீது பொலிசாரினால் கண்ணீர்ப்புகை தாக்குதல் மற்றும் நீர் பீச்சியடிப்பு**

பொலிசாரினால் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட சிலையொன்றை மீளத்தருமாறு கோரி அமைதியாக எதிர்ப்பு தெரிவித்த சுமார் 3,000 கத்தோலிக்கர்களைச் சேர்ந்த குழுவொன்றை கலைப்பதற்காக ஒக்ரோபர் 21 அன்று பொலிசார் நீரைப் பீச்சியடித்ததுடன், கண்ணீர் புகைகளையும் பயன்படுத்தினர். களுத்துறை மாவட்டத்தில் கட்டுக்குருந்தவில் சென்ற் பிலிப் மேரி தேவாலயம் அமைந்திருந்த வீதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனமொன்றில் சென்ற் பிலிப் நேரியின் சிலை நிறுவப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளிடமிருந்து உத்தியோகபூர்வ அனுமதியின்றி சிலையைத் தேவாலயம் நிறுவியுள்ளதாக பௌத்த மதகுருமார்களின் குழுவொன்று முறைப்பாடு செய்த பின்னர் சிலையைப் பொலிசார் அகற்றியுள்ளனர். “பெரும்பான்மை சமயத்திற்கு மட்டுமன்றி, சகலருக்கும் சமயத்தின் சுதந்திரத்திற்கு இலங்கையின் அரசியலமைப்பு உத்தரவாதமளிக்கின்றது. அங்கு சிலையை நிறுவுவதற்கு கத்தோலிக்கர்களுக்கு சகல உரிமைகளும் உள்ளன” என ucanews.comக்கு கத்தோலிக்க மதகுருவான வண.அத்திடிய தெரிவித்திருந்தார்.
http://www.ucanews.com/news/tear-gas-water-canons-used-on-protesting-sri-lankan-catholics/72006

## உ. மாணவ செயற்பாட்டாளர்களுக்கெதிரான அடக்குமுறை

**24. மொனராகலையில் எதிர்ப்புஇயக்கத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டனர்**

மொனராகலை பட்டினத்தில் கிளர்ச்சி ஒன்றில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஈடுபட்டிருந்த அதேவேளை, ஆளும் கட்சிகளைச் சேர்ந்த மொனராகலை பிரதேச சபையின் (உள்ளூராட்சி உறுப்பு) தலைவர் மாணவர்களை அச்சுறுத்தியதுடன், எதிர்ப்புப் பதாகைகளையும் அழித்தார். அண்ணளவாக இரு வாரங்களாக பல்கலைக்கழகத்திடம் மாணவர் மன்றத்தையும், பீட சபைகளையும் மீள்-தாபிக்குமாறு கோரி இயக்கமொன்றில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். பிரச்சனைகளையும், தமது கோரிக்கைகளையும் பொது மக்கள் அறியச் செய்வதே மொனராகலை பட்டினத்தில் இடம்பெற்ற மாணவர்களின் கிளர்ச்சியாகும்.
http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7601:sabaragamuwa-students-threatened-at-monaragala-&catid=42:smartphones&Itemid=74

**25. மாணவத் தலைவர்களைத் தேடி பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தைப் பொலிசார் சுற்றிவளைப்பு**

பல்கலைக்கழக வளவில் தேடுதல் நடத்துவதற்கு தமக்கு அவசியம் என்ற காரணத்தின் பேரில், பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை கலகம் அடக்கும் படையுடன் இணைந்து பொலிசார் சுற்றிவளைத்தனர். பல்கலைக்கழகத்தினுள் பிரவேசிப்பதற்கு நீதிமன்ற உத்தரவொன்றைப் பொலிசார் பெற்றிருந்தனர். பல்கலைக்கழகத்தில் அத்தகையதொரு தேடுதலை நடத்துவதற்கு பல்கலைக்கழக நிருவாகம் மட்டுமே அதிகாரத்தைக் கொண்டுள்ளது என மாணவ பிக்குகள் (பௌத்த மதகுருமார்கள்) வாதிட்ட போது, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் தலைவர்களைத் தாம் தேடுவதாகப் பொலிசார் தெரிவித்தனர்.
http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=11835:police-surround-buddhist-and-pali-university-search-for-iusf-representatives&catid=150:lead-news&Itemid=113

## ஊ. எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளை அடக்குதல்

**26. எதிர்க்கட்சி தலைவர் ஒருவரின் வாசஸ்தலத்தில் உள்ள அவரது அலுவலகம் எரியூட்டப்பட்டது**

ஊவா மாகாண சபை தேர்தலுக்கான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி. - மக்கள் விடுதலை முன்னணி) அபேட்சகர்களின் குழுவின் தலைவரான சமந்த வித்யாரத்னவின் தேர்தல் அலுவலகம் எரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ரிதிமலியத்தவில் உள்ள திரு.வித்யாரத்னவின் வதிவிடத்தில் உள்ள தேர்தல் அலுவலகம் 2014 செப்ரெம்பர் 19 அன்று நள்ளிரவில் வந்திறங்கிய காடையர்களைக் கொண்ட குழுவொன்றினால் உடைக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. மறுநாளான 20ஆம் திகதி குழு திரும்ப வந்து, அதற்கு தீ வைத்தது. 2014 செப்ரெம்பர் 20ஆம் திகதியே ஊவா மாகாண சபையின் தேர்தல் தினமாகும்.
http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7626:vidyaratnas-office-at-his-residence-torched&catid=42:smartphones&Itemid=74



ஊவா மாகாண சபை தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் சுமார் 50 தேர்தல் அலுவலகங்கள் தாக்கப்பட்டன (ஐ.தே.க. தேர்தல் அலுவலகமொன்றுக்கு சொந்தமான ஓர் எரியூட்டப்பட்ட முச்சக்கர வண்டி; Photo: CaFFE)

## 27. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (இ.த.க.) “பயமுறுத்தலை” மட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புச் செயலாளர் விரும்புகிறார்

வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (இ.த.க.) 15ஆவது தேசிய மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பான்மையிலான தீர்மானங்கள் புத்தம் புதிதாக அரசியல் கொந்தளிப்பினை விளைவிப்பதற்கான கருத்தினைக் கொண்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்) சார்த்துரைத்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எனவே, இ.த.கட்சியின் பயமுறுத்தலை மட்டுப்படுத்துவதற்கு ஒரு சாத்தியமான இயக்கம் அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார். வட மாகாண சபையைக் கட்டுப்படுத்தும் ஐந்து கட்சிகளிலான தமிழ் தேசிய கூட்டமைப்பின் (த.தே.கூ.) தலையாய பங்காளியாக இ.த.க. விளங்குகிறது. அனேகமாக சகல தீர்மானங்களுமே பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவிப்பதுடன், அவ்வாறாக அது இலங்கை அரசாங்கத்தைக் குறைத்து மதிப்பிடுகின்றது என்ற பாதுகாப்புச் செயலாளர் ராஜபக்ஷ, த.வி.கூட்டமைப்பின் மூலோபாயத்திற்கு ஆதரவளிக்கும் சர்வதேச சமுதாயத்தின் மத்தியில் உள்ளவர்களையும், ஏனைய உள்ளூர் அரசியல் கட்சிகளையும், பிரச்சனையில் உள்ள முன்மொழிவுகளின் தொகுதியை நுணுக்கமாகப் பரிசீலிக்குமாறு வலியுறுத்தினார்.
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=110143

## 28. எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் பட்டியலை அமைச்சரின் செயலாளர் கோருகின்றார்

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆகிய இரு பாரிய எதிர்க்கட்சிகளிலிருந்து எதிர்த்தரப்பு அரசியல் கட்சி செயற்பாட்டாளர்களின் பட்டியலொன்றை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டு ஊவா மாகாணத்தில் உள்ள சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் கடிதமொன்றை நீர்ப்பாசன, நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் இணைப்புச் செயலாளரான பி.இலேபெரும அனுப்பியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களின் அடிப்படை உரிமைகளைக் கடிதம் மீறுகின்றது என்ற காரணத்தின் மீது அதற்கு எதிரான மனித உரிமை ஆணைக்குழுவில் மனுவொன்றை ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான ஜே.வி.பி. அபேட்சகர்களின் குழுவின் தலைவரான சமந்த வித்யாரத்ன தாக்கல்செய்துள்ளார்.
http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7623:audio-siripala-wants-a-list-jvp-goes-to-hrc&catid=42:smartphones&Itemid=74